# விசுவாசம்

Transcribed from a message spoken on October 3, 2010

By *R.S.Milton*

*"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்"* (எபி. 11:6).

## தேவனுடைய நித்திய நோக்கம்

தேவனுடைய நித்தியத் திட்டத்தைப்பற்றியும், நித்திய நோக்கத்தைப்பற்றியும் நாம் அடிக்கடி ஐக்கியம் கொண்டிருக்கிறோம். ஆதியாகமம்தொடங்கி திருவெளிப்பாடுவரை தேவன் ஒன்றேவொன்றைத்தான் செய்துகொண்டிருக்கிறார். அவர் தம் நித்திய நோக்கத்தையும், நித்தியத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அந்த நித்திய நோக்கமும், நித்தியத் திட்டமும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவில் இருக்கிறது. மிக எளிய வார்த்தைகளில் சொல்வதானால், தேவன் தம் குமாரனை இந்த முழுப் பிரபஞ்சத்திலும் வெளியரங்கமாக்கவேண்டும், வெளியாக்க வேண்டும், என்று விரும்புகிறார். எபேசியர் முதல் அதிகாரம் அதைப்பற்றித்தான் பேசுகிறது. *"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்து வுக்குள் கூட்டப்படவேண்டும்"* (எபே. 1:9) (கிறிஸ்துவின் தலைமைத்துவத்துக்குள் கூட்டிச்சேர்க்க வேண் டும்" என்பது தேவனுடைய நித்திய நோக்கம். காலங்கள் நிறைவேறும்போது இந்தப் பிரபஞ்சத்தில் ஒரேவொரு நபர் மட்டுமே வெளியாக்கப்படுவார். அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. பல நபர்கள் இருப்பார்கள். ஆனால், வெளியாக்கப்படுகிற நபர் ஒருவராகத்தான் இருப்பார். இயேசு கிறிஸ்து மட்டுமே. நீங்கள் இருப்பீர்கள். நான் இருப்பேன். ஆனால், வெளியாக்கப்படுகிற நபர் கிறிஸ்து இயேசுவாக மட்டுமே இருப்பார். இது மிகவும் அற்புதமானது! ஆச்சரியமானது! ஒரு பக்கம், நீங்கள் நீங்கள்தான், நான் நான்தான். ஆனால், இந்த முழுப் பிரபஞ்சத்திலும் எங்கு நோக்கினாலும், எதை நோக்கினாலும், யாரை நோக்கினாலும், ஒரேவொரு நபர்தான் வெளியாவார். அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

## அடிப்படைத் தேவை

இன்றைக்கு அந்த வேலையைப் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மக்களிடையே அல்லது தேவ னுடைய சபையிலே செய்துகொண்டிருக்கிறார். இந்த வேலையை அவர் உலகத்திலே செய்யவில்லை. கிறிஸ்து இயேசுவை நமக்குள் உருவாக்குவது அல்லது நம் கட்டமைப்பை கிறிஸ்து இயேசுவுக்கு ஒத்த கட்டமைப்பாக உருவாக்குவது என்ற வேலையைப் பரிசுத்த ஆவியானவர் செய்துகொண் டிருக்கிறார்.

ஆனால், இதற்கு அடிப்படையான ஒன்று தேவன்பேரில் நாம் வைத்திருக்கிற விசுவாசம். கிறிஸ்துவை வெளியாக்குவதற்கும், நாம் தேவன்பேரில் வைக்கிற விசுவாசத்திற்கும் என்ன தொடர்பு? தேவன்மேல் விசுவாசம் இல்லாமல் பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட முடியாது. பரிசுத்த ஆவியானவரின் மிக முக்கியமான வேலை இயேசு கிறிஸ்துவை நமக்குள் உருவாக்குவது அல்லது இயேசு கிறிஸ்து வின் குணத்தை நமக்குள் உருவாக்குவது அல்லது நம்முடைய கட்டமைப்பை இயேசுவின் குணத்துக்கு ஒத்ததாக மாற்றுவது. இதுவே பரிசுத்த ஆவியானவரின் மிக முக்கியமான வேலை, பிரதானமான வேலை.

நாம் தேவன்மேல் வைத்திருக்கிற விசுவாசம் தளர்ந்திருந்தால் பரிசுத்த ஆவியானவர் அந்த வேலையை நமக்குள் செய்ய முடியாது. தேவன்மேல் நாம் வைத்திருக்கிற விசுவாசம் உறுதியாக, ஆரோக்கியமாக இல்லாவிட்டால் தேவன் நம்முடைய வாழ்க்கையிலும், நம்முடைய வாழ்க்கையின்மூலமாகவும் அவ ருடைய நித்திய நோக்கத்தை, நித்தியத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது.

### 1. விசுவாசம்

விசுவாசம் என்றால் என்ன? "இதற்குப் பதில் எபிரேயர் 11:1இல் இருக்கிறது," என்று வசனத்தை மேற்கோள்காட்ட வேண்டாம். வசனங்களை மேற்கோள் காட்டும்போது, அதில் தேவனுடைய எண்ணம் என்னவென்பதை நாம் தவறவிடுகிற வாய்ப்பு இருக்கிறது.

அன்பு, தைரியம், பொறுமை, பரிசுத்தம், தாழ்மை என்று எவ்வளவோ காரியங்கள் முக்கியம் என்று சொல்லலாம். இவைகளைப்பற்றிய ஒரு செய்தியைக் கேட்டவுடன் அதுதான் முக்கியம் என்று தோன் றும். ஆனால், வருடக் கடைசியில் எது உண்மையாகவே முக்கியம் என்று தெரியாமல் போய்விடும்.

எனவே, இரண்டு கேள்விகளை நான் உங்களுக்குமுன் வைக்கிறேன். விசுவாசம் என்றால் என்ன? ஏன் விசுவாசம் அதி முக்கியம்?

எபிரேயர் 1:1யை நான் அடிப்படையாக வைத்துக்கொள்கிறேன்: "*விசுவாசமானது நம்பப்படுகிறவை களின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.*" இந்த வசனம் மிகவும் பரிச்சயமான வசனம். ஆனால், இந்த வார்த்தைகள் புரிந்துகொள்வதற்குக் கொஞ்சம் கடினமானவை. வாசித்தவுடன் அவைகளைச் சட்டென்று புரிந்துகொள்ள முடியவில்லை. முழுமையாகப் புரிந்துவிட்டது என்றும் சொல்லமுடியாது, அறவே புரியவில்லை என்றும் சொல்லமுடியாது.

இந்த உலகில் வண்ணங்கள், நிறங்கள், இருக்கின்றன. வண்ணங்கள் அழகாக இருக்கின்றன. ஆனால், கண்பார்வையற்றவருக்கு நிறங்கள் தெரியாது. உண்மையில் நிறம் என்று ஒன்று இருக்கிறது. ஆனால், அவருடைய உலகத்தில் நிறம் என்று ஒன்று இல்லை.

நல்ல பாடல்கள் இருக்கின்றன. ஆனால், காது கேளாதவருக்கு இசை தெரியாது. உண்மையில் இசை என்று ஒன்று இருக்கிறது. ஆனால், அவருடைய உலகத்தில் இசை என்று ஒன்று கிடையாது. அவரைப் பொறுத்தவரை, இசைக்கு எந்தப் பொருளும் கிடையாது.

கேட்டல் என்றால் அந்த இசை அவருக்கு, உண்மையாக, நிஜமாக, மெய்யாக, மாறுகிறது. பார்த்தல் என்றால் அந்த நிறங்கள் அவருக்கு உண்மையாக, நிஜமாக, மெய்யாக, மாறுகின்றன.

கட்புலன், செவிப்புலன் எனப் பல புலன்கள் இருக்கின்றன. ஒரு புலன் இந்த உலகத்தில் இருக்கிற சில உண்மைகளை நமக்கு நிஜமாக்குகிறது. பார்த்தல்மூலம் நிறங்கள் நிஜமாகின்றன. கேட்டல்மூலம் இசை நிஜமாகின்றது. அதுபோல, விசுவாசித்தல் என்பது ஒரு புலன். தேவனைப் பொறுத்தவரை பல உண்மைகள் உள்ளன. விசுவாசத்தின்மூலம் பரம மண்டலத்தில் அல்லது ஆவிக்குரிய மண்டலத்தில் அல்லது தேவனுடைய மண்டலத்தில் உள்ள உண்மைகள் நமக்கு நிஜமாகின்றன, மெய்யாகின்றன. இதுதான் எபிரெயர் 11:1இன் பொருள்.

"Now faith is the substantiating of things hoped for, the conviction of things not seen," என்பது J.N.Darbyயின் மொழியாக்கம். விசுவாசம் என்பது என்ன? இந்த இயற்கையான மண்டலத்தில் நாம் பார்க்கமுடியாத ஆவிக்குரிய பொருள்களை நிஜமாக்குவது, மெய்யாக்குவது, விசுவாசம்.

திரையரங்கில் ஒரு வெள்ளைத் திரை கட்டியிருப்பார்கள். அதில் படம் ஓடும். திரை இல்லையென்றால் படம் பார்க்க முடியாது. திரை, படத்தை நிஜமாக்குகிறது. அதுபோலத்தான் விசுவாசம் உண்மைகளை நிஜமாக்குகிறது.

சூரியன் கிழக்கில் உதிக்கிறது என்பது ஓர் உலகளாவிய உண்மை. காலையில் எழுந்து சூரியன் உதிப்பதைப் பார்த்தபிறகுதான் இதை நம்ப வேண்டும் என்பதில்லை. பூமி சூரியனைச் சுற்றிவருகிறது என்பது ஓர் உண்மை. இயற்கை உலகில் இவைகளெல்லாம் உண்மைகள். நாம் இவைகளைப் பார்த் தாலும் உண்மைதான், பார்க்காவிட்டாலும் உண்மைதான்.

தேவன் பல உண்மைகளை, பல விதிகளை, பல பிரமாணங்களை, பல வழிகளை, பல பாதைகளை, தம் ஆவிக்குரிய மண்டலத்தில் அவர் வைத்திருக்கிறார். அவைகளெல்லாம் உண்மைகள். ஆண்டவ ராகிய இயேசு தம் இரத்தத்தினாலே நம் பாவங்களை மன்னித்துவிட்டார் என்பது ஓர் உண்மை.

இந்த உலகத்தில் கோடான கோடி மக்கள் தங்கள் பாவங்கள் ஆண்டவராகிய இயேசுவின் இரத்தத்தால் மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கவில்லை. அவர்கள் பார்க்காவிட்டாலும் இது உண்மை தான். அவர்கள் பார்க்கவில்லையென்பதால் அது பொய்யாகிவிடாது. அதுபோல, திரைப்பட நட்சத் திரங்கள் ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள் என்பதால் அது அதிக உண்மையாகவும் மாறிவிடாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தால் நம் பாவங்களைக் கழுவியிருக்கிறார், மன்னித்திருக் கிறார் என்பது உண்மை. சூரியன் கிழக்கில் உதிக்கிறது என்பது உண்மையென்றால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தினால் என் பாவங்களை மன்னித்திருக்கிறார் என்பது அதைவிட அதிக உண்மை. தேவனுடைய வார்த்தை அப்படிச் சொல்லுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் ஜீவனை என்னோடு பகிர்ந்துகொண்டார் என்பது இன்னொரு உண்மை. 9 கோள்கள் சூரியனைச் சுற்றிவருகின்றன என்பது உண்மையானால், இது அதைவிட பெரிய உண்மை.

"*தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை*" (1 கொரி. 2: 9) என்று எழுதியிருக்கிறது. அப்படியானால் என்ன பொருள்? தேவன் இப்படி ஒன்றைச் செய்யத் திட்டமிட் டிருக்கிறார் என்பது மனித இருதயத்தில் கற்பனையாகக்கூடத் தோன்ற முடியாது. தேவனே அதைச் சொன்னால் மாத்திரம் நாம் அதைத் தெரிந்துகொள்ள முடியும். இல்லையென்றால் தெரிந்துகொள் வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

சகோதரன் *வாட்ச்மேன் நீ* ஓர் உவமையைச் சொல்லியிருக்கிறார். ஒரு சிறிய சுவரில் மூன்றுபேர் நடந்துபோனார்களாம். முதலாவது நபரின் பெயர் *உண்மை*. இரண்டாவது நபரின் பெயர் *விசுவாசம்*. மூன்றாவது நபரின் பெயர் *அனுபவம்*. இவர்களுடைய ஒப்பந்தம் என்னவென்றால் விசுவாசம் என்பவர் உண்மை என்பவர்மேல் தன் கண்களைவைத்துக்கொண்டு நடக்க வேண்டும்; அனுபவம் விசுவாசத்திற் குப்பின்னால் வர வேண்டும். கொஞ்ச நாட்களாக இந்த வரிசையிலேயே மூன்றுபேரும் நடந்துகொண் டிருந்தார்கள். உண்மை என்பவர் யாரையும் கண்டுகொள்ள மாட்டார். தன்னை யாராவது கண்டுபிடித் தார்களா, கண்டுபிடிக்கவில்லையா என்பதைப்பற்றி அவர் கவலைப்பட மாட்டார்.

சூரியனைச்சுற்றி கோள்கள் சுற்றிவருகின்றனவா, எத்தனை கோள்கள் சுற்றிவருகின்றன என்பதைப்பற்றி சூரியனுக்குக் கவலையில்லை.

அதுபோல, உண்மைக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. சிலர் கண்டுபிடிப்பார்கள். அப்போதும் அது உண்மைதான். சிலர் அதைக் கண்டுபிடிக்க மாட்டார்கள். அப்போதும் அது உண்மைதான். உண்மை என்ற நபர் நடந்துபோய்க்கொண்டே இருப்பார். விசுவாசம் என்ற நபர் உண்மையைப் பார்த்துதான் நடக்க வேண்டும். அனுபவம் என்ற நபர் எப்போதும் விசுவாசம் என்ற நபருக்குப்பின்னால்தான் வருவார். கொஞ்ச நாட்களுக்குப்பின் விசுவாசம் என்ற நபருக்கு ஒரு கேள்வி வருகிறது. உண்மை யிலேயே அனுபவம் தனக்குப் பின்னால் வருகிறாரா இல்லையா என்ற எண்ணம் விசுவாசம் என்ற நபருக்கு வந்தது.

இயேசு கிறிஸ்துவின் ஜீவன் நமக்குள் இருப்பதால், அவருடைய அடிச்சுவடுகளில் நாம் நடக்கலாம். இது உண்மை. ஆனால், "இவர்கள் சொல்வதை நம்பி நாம் வந்துவிட்டோம். இதுதான் உண்மை என்று நம்பி கத்தோலிக்க சபையை விட்டு வந்துவிட்டோம். இன்னும் 20 வருடம் கழித்து நாம் நம்பியவைகள் பொய் என்று தெரிந்தால் என்னவாகும்?" என்பதுபோன்ற கேள்விகள் சில இருளான தருணங்களில் நமக்குள் எழும்.

எனவே, விசுவாசம் கொஞ்சம் தயங்கி பின்னால் பார்த்தாராம். யாரை? அனுபவத்தை. முன்னால் பார்ப்பதற்குப்பதிலாகப் பின்னால் பார்த்தால் என்ன நடக்கும்? பின்னால் பார்த்தவுடன் விசுவாசம் கீழே விழுந்துவிட்டார். அனுபவமும் கீழே விழுந்துவிட்டார். ஆனால், உண்மை மட்டும் போய்க்கொண்டே இருந்தார். அவர் யாரையும் பார்க்கமாட்டார். அவர் போய்க்கொண்டேதான் இருப்பார்.

நாம் விசுவாசிக்கின்ற உண்மை நம் அனுபவத்தில் நிஜமா, மெய்யா என்பதைப்பற்றி பல வேளைகளில் கவலைப்படக் கூடாது.

நம் தகப்பனாகிய ஆதாம் தொடங்கி, ஆபிரகாம், நோவா, என நம் முற்பிதாக்கள் எல்லாரும் விசுவாசத்தால்தான் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார்கள். யாராவது தேவனுடைய ஆசீர்வாதத்தை இழந்தார்கள் என்றால் அது விசுவாசமின்மையினால்தான்.

"*விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்*" (எபி. 11:7). "*விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக் கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்*" (எபி. 11:8). மோசே "*விசுவாசத்தினாலே அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல், எகிப்தைவிட்டுப் போனான்*" (எபி. 11:27). அவர்கள் காண வில்லை, ஆனால், செய்தார்கள். அவர்கள் கேட்கவில்லை, ஆனால், செய்தார்கள். அவர்களுக்குத் தெரியவில்லை, ஆனால், செய்தார்கள். இதுதான் எபிரெயர் 11ஆம் அதிகாரத்தின் சாராம்சம்.

## விசுவாசத்தின் அவசியம்

விசுவாசம் என்பது கற்பனை அல்ல. அது உண்மை, எனவே, விசுவாசிக்கிறோம். ஒரேவொரு வேறுபாடு என்னவென்றால், அது இயற்கையான தளத்தில் உள்ள உண்மையல்ல. அது ஆவிக்குரிய தளத்தில் உள்ள உண்மை. இயற்கையான தளம் என்று ஒன்று இருப்பதுபோல, ஆவிக்குரிய தளம் என்றும் ஒன்று இருக்கிறது. இயற்கையான தளத்தைவிட ஆவிக்குரிய தளம் அதிக உண்மையானது. *"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்"* (2 கொரி. 5:6) என்று பவுல் சொல்லுகிறார்.

தேவ மக்கள் இந்த உலகத்தில் "நடப்பதற்கு" விசுவாசம் வேண்டும். இந்த உலகத்து மக்களைப்போல் நடப்பதற்கு விசுவாசம் தேவையில்லை. *"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிற தில்லை. கலக்கமடைந்தும், மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை"* (2 கொரி. 4:8, 9) என்று பவுல் பறைசாற்றுகிறார். ஒரு முட்டையை எல்லாப் பக்கமும் நெருக்கினால் உடையும், ஆனால், என்னே ஆச்சரியம்! தான் ஒடுங்கிப் போகவில்லை, உடைந்துபோகவில்லை என்று பவுல் கூறுகிறார். மனிதன் ஒரு முட்டையைவிடப் பலவீனமானவன். நாம் மண்பாண்டங்கள் ( 2 கொரி. 4:7) என்று பவுல் எழுதுகிறார். இந்த மண்பாண்டம் எல்லாப் பக்கமும் நெருக்கப்படுகிறதாம். ஆனால், அது உடைந்துபோகவில்லையாம். இது ஆச்சரியம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அது எப்படி? இந்நேரத்திற்கு இந்த மண்பாண்டம் சுக்குநூறாக உடைந் திருக்க வேண்டும். ஆனால், அது இன்னும் உடையாமல் இருக்கிறது. ஏறக்குறைய மோசேக்குக் கர்த்தர் முட்புதரில் தோன்றியதுபோல, இது என்ன? தீ எரிந்தும் இன்னும் கரிந்துபோகாமல் இருக் கிறதே! இப்படிப்பட்ட முட்செடியைப் பார்த்திருக்கிறோமா? பார்த்ததில்லை.

தேவனுடைய தளத்தில், பரம தளத்தில், ஆவிக்குரிய தளத்தில், நடப்பதற்கு விசுவாசம் வேண்டும். மோசே எகிப்தில் பெரிய இளவரசன். *"பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன் பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணி, அதரிசன மானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட் டுப் போக"* (எபி 11:24-27). விசுவாசம் வேண்டும். நல்ல நல்ல கல்வி, வேலை, பணம், வசதி, சௌகரி யங்கள், புகழ், செல்வாக்கு ஆகியவைகளை நிராகரித்துவிட்டு, புறக்கணித்துவிட்டு, "யெஹோவா என்னை அழைத்திருக்கிறார். நான் அவரோடு போகிறேன்" என்று சொல்வதற்கு விசுவாசம் வேண்டும்.

உலகத்து மக்களைப்போல் நடப்பதற்கு விசுவாசம் வேண்டாம். *"நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்"* (பிலி. 4:11, 12) என்று பவுல் கூறுகிறார். எப்படிக் கற்றுக்கொண்டார்? *"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு"* (பிலி. 4:13). இது அக்கினிச் சூழலிலிருந்து வந்த வசனம். விசுவாசத்தினால் மட்டுமே அது கூடும்.

சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லை என்கிற நிலைமைக்கு தேவன் நம்மைக் கொண்டுவருகிறார் என்று வைத்துக்கொள்வோம். "இதோடு என் வாழ்க்கை முடிந்துவிட்டது" என்பதுதான் இந்த உலகத்து நடை. ஆனால், அது அப்படியல்ல. "இவர்கள் கதை முடிந்துவிட்டது," என்று அப்போஸ்தலர்களைப்பற்றிச் சொல்லுகிறார்கள். ஆனால், அவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள். எப்படி இயேசுகிறிஸ்துவின் மரணம் எங்கள் சரீரங்களில் வேலைசெய்கிறதோ, அதுபோல இயேசு கிறிஸ்துவின் ஜீவனும் எங்கள் உடலில் வேலை செய்கிறது என்று பவுல் கூறுகிறார். இது நான் சொல்ல விரும்புகிற முதல் காரியம்.

தேவனுடைய தளம் என்பது கிறிஸ்துவே. ஆவிக்குரிய தளத்தில் இருக்கிற உண்மைகளைப்பற்றி பரிசுத்த ஆவியானவர் ஒருநாள் நம் இருதயத்தில் விசுவாசம் என்கிற புலனை நமக்குள் வைத்துவிடு கிறார். அதைத் தேவன்தான் வைக்க வேண்டும். விசுவாசம் என்பது தேவன் நமக்குள் வைக்கிற ஒரு புலன். சுவைப்பது ஒரு புலன், கேட்டல் ஒரு புலன், பார்த்தல் ஒரு புலன். அதுபோல, விசுவாசம் என்பது தேவன் நமக்குள் வைக்கிற ஒரு புலன். ஒருநாள் இயேசு கிறிஸ்து அந்தப் புலனை நமக்குள் வைத்துவிடுகிறார். அதற்குப்பிறகு நம்முடைய பார்வை வேறு பார்வையாக மாறிவிடுகிறது. இந்த உலகத்தின் பாவங்களுக்கு நாம் தப்பி வாழ்வதற்கு நமக்கு விசுவாசம் வேண்டும். வீடு வாங்குவதற்கு விசுவாசம் வேண்டும். வாங்காமல் இருப்பதற்கும் விசுவாசம் வேண்டும். வாங்கிய வீட்டை விற்பதற்கும் விசுவாசம் வேண்டும். விசுவாசத்தால் வராத யாவும் பாவமே!

விசுவாசத்தினால் நாம் நடந்துபோகலாம். நமக்கு ஒன்றும் ஆகாது. FMPBயின் சாம் கமலேசின் சாட்சியை நான் கேட்டிருக்கிறேன். நல்ல உணவு கொடுக்க முடியாததால் அவருடைய தாயார் அவருக்கு மாட்டுப் புண்ணாக்கைக் கொடுப்பார்களாம். இந்தப் புண்ணாக்கைச் சாப்பிட்டால் வயிற்றுப் பிரச்சினை வரும் என்று சொல்வார்கள். ஆனால், அவர் ஒன்றும் வாலிப வயதில் மரிக்கவில்லை. அவர் எவ்வளவு அருமையாகப் பாடியிருக்கிறார் தெரியுமா?

தேவன் நம்மை ஒரு குறிப்பிட்ட பாதையிலே நடத்துவார். அது தேவனுடைய கரம் என்றால் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம், பயப்பட வேண்டாம்.

நாம் விசுவாசித்தாலும் விசுவாசிக்காவிட்டாலும் தேவனுடைய உண்மைகள் உண்மைகள்தான்.

### 2. உண்மைகளைக் கண்டறியும் காலஇடைவெளி

இரண்டாவது, அந்த ஆவிக்குரிய தளத்தை, அந்த உண்மைகளை, தூரத்தில் கண்டு அணைத்துக் கொண்டார்கள். அப்படியானால் என்ன பொருள்? ஒரு அடி எடுத்து வைத்தவுடன் உண்மையைக் கண்டுபிடித்துவிட முடியாது.

டைகோ பிராகே என்று ஓர் அறிவியல் அறிஞர் இருந்தார். அவர் கோள்களெல்லாம் எப்படிச் சுற்றி வருகின்றன என்று பெரிய ஆராய்ச்சி செய்தார். அவைகளுடைய அளவு, நிறை, சுற்றுப்பாதை என அவைகளைப்பற்றி ஆயிரம் பக்கக்களுக்கும் அதிகமாக எழுதினார். அவர் எழுதியவைகளை பகுப்பாய்வுகூடச் செய்ய முடியவில்லை. அவர் ஒருநாள் மரித்தார். அவருக்குப்பின் கெப்ளர் என்று இன்னொரு அறிவியல் அறிஞர் வந்தார். டைகோ என்பவர் எழுதின எண்களையெல்லாம் இவர் ஆராய்ச்சிசெய்து, அவர் எழுதியவைகளின் சுருக்கத்தை மூன்றே வரிகளில் சொல்லிவிட்டார். "எல்லாக் கோள்களும் வட்டத்தில் சுற்றிவருகின்றன" என்பதுதான் அந்தச் சுருக்கம்.

எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால் "இது உண்மை" என்று கண்டுபிடித்து நாம் ஒரு படி எடுத்துவைத்தவுடன் "நான் கண்டுபிடித்துவிட்டேன். இது உண்மை" என்று சொல்லிவிட முடியாது. தூரத்தில் கண்டு அணைத்துக்கொண்டார்கள்.

ஆவிக்குரிய தளத்தில் சில விதிகளும், பிரமாணங்களும், இருக்கின்றன. அந்த விதிகளும், பிரமாணங்களும், இயற்கையான தளத்திலுள்ள விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும், முரணாக இருக்கலாம். ஆனால், ஆவிக்குரிய தளத்திலுள்ள விதிகளையும், பரமாணங்களையும் நாம் விசுவாசிக்கிறோம். ஒரு அடி எடுத்து வைத்தவுடன் அது உண்மையாகத் தோன்றாது. இரண்டு அடி, 100 அடி, 1000 அடி, 10,000 அடி வைத்தபின்தான், ஒருவேளை, அது தெரிய ஆரம்பிக்கும். தூரத்தில் கண்டு அதை அணைத்துக்கொண்டு போக வேண்டும். இந்த உலகம் அந்தப் பாதையில் அப்படி நடக்காது. "இன்று குலுக்கல், நாளை இலட்சாதிபதி" என்பதுதான் இந்த உலகத்தின் மனப்பாங்கு, இந்த உலகம் உடனடி ஆதாயம் தேடும். தேவனுடைய வழிகள் தூரத்தில் கண்டு, அணைத்துக்கொள்ளப்படவேண்டியவை. ஒருவேளை, 1 வாரம் ஆகலாம், 5 வருடம் ஆகலாம், 10 வருடம் ஆகலாம், 20 வருடம் ஆகலாம்.

தேவன் தம் உண்மைகளை நமக்கு வெளிப்படுத்துவதற்கும், அந்த உண்மைகளை நம் வாழ்வில் மெய்யாக்குவதற்கும் இடையே எப்போதும் ஒரு காலஇடைவெளி இருக்கும். "நான் உனக்கு ஒரு குமாரனைத் தருவேன்," என்று 75 வயதில் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குறுதி கொடுத்தார். ஆனால், 100 வயதில் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறார். என்னுடைய ஒரு கேள்வி. 100 வயதில்தான் குழந்தையைக் கொடுப்பார் என்றால் அதை 75வயதில் ஏன் சொல்ல வேண்டும்? இடைப்பட்ட 25 ஆண்டுகள் ஏன் அவர் ஆபிரகாமை ஒரு பதற்றத்தில் வைக்க வேண்டும்? குழந்தையைக் கொடுப்பதற்கு ஒரு வருடத்திற்குமுன் சொன்னால் போதாதா? 75 வயதிலேயே வாக்குறுதி கொடுத்து, அது நிறைவேறும்பரை அவனை ஏன் திண்டாட வைக்க வேண்டும்? "வாக்குறுதி நிறைவேறுமா நிறைவேறாதா? ஆவர் சொன்னதை நம்பி, நம் ஊரையும், வீட்டையும், இனத்தையும்விட்டு நீண்ட தூரம் வந்துவிட்டோமே! இனி பின்னால் திரும்பிப் போகவும் முடியாது. திரும்பிப்போனாலும் கிண்டலும் கேலியும் செய்வார்களே! மகிமையின் தேவன் தரிசனமானார் என்று சொல்லிப் போனாயே? என்னவாயிற்று என்று கிண்டல் செய்வார்களே! முன்னாலும் போகமுடியவில்லை. பின்னாலும் போக முயடிாது. என்ன செய்வது?" என்று எண்ணத் தோன்றாதா?

### 3. விசுவாசத்தில் நடக்க நம் நடவடிக்கை

மூன்றாவது, தேவன் ஒரு சிறு மகிமையைக் காட்டியபின், அதன்படி நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோருவார். சின்ன விதை வடிவத்தில் அவர் ஒன்றைக் காட்டுவார். அதன்

அடிப்படையில் தேவன் நம்மிடம் ஒரு செயலை எதிர்பார்ப்பார். ஆபிரகாம் என்றால் "நீ நடக்க வேண்டும்" என்று கோருவார். மோசே என்றால் "நீ விடவேண்டும்" என்று கோருவார்.

விசுவாசத்தால் வாழ்கிற யாரும் நடவடிக்கை எடுக்காமல் வாழ முடியாது. ஆவிக்குரிய தளத்தில் இது உண்மை என்பதால் அது தானாகவே நம் வாழ்க்கையில் மெய்யாக, நிஜமாக, மாறும் என்று நாம் நினைக்கவோ, எதிர்பார்க்கவோ கூடாது. விசுவாசத்தால் வாழ்கிற யாருடைய வாழ்க்கையிலும் அப்படி நடக்காது. தேவன் ஓர் உண்மையைக் காட்டும்போது நாம் அதைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் செயல்பட வேண்டும். செயல்பாடு வருகிறவரை தேவன் அந்த உண்மையை நம் வாழ்க்கையில் நிறைவேற்ற முடியாது.

நான் மூன்று காரியங்களைச் சொன்னேன்.

1. விசுவாசம் என்றால் என்ன?

2. அந்த உண்மையை நாம் விசுவாசிப்பதற்கும், அது மெய்யாக ஆவதற்கும் இடையிலே எப்போதும் ஒரு கால இடைவெளி இருக்கும்.

3. ஆனால், இந்தக் கால இடைவெளியில் நாம் செயல்பட வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பார். நாம் பார்த்த உண்மை மெய்யாகிவிட்டது என்பதுபோல் நம் நடை இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அதுதான் நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் என்பதின் பொருள். இன்னும் நான் அதைப் பார்க்கவில்லை, கேட்கவில்லை, பெறவில்லை. ஆனால், அது உண்மை என்று பரிசுத்த ஆவியானவர் எனக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். எனவே, நான் செயல்பட வேண்டும். விசுவாசம் என்கிற புலன் வளர வேண்டும். அது வளர்வதற்குக் கால இடைவெளி என்கிற பயிற்சி தேவைப்படுகிறது. விசுவாசம் ஆவிக்குரிய தசை என்றுகூடச் சொல்லலாம். இது இல்லாமல் தேவ னோடு நாம் எந்த இடைப்பாடும் வைத்துக்கொள்ள முடியாது. விசுவாசம் என்கிற புலன் வளர்வதற்காக, முதிர்ச்சியடைவதற்காக, வலுப்பெறுவதற்காக, தேவன் இந்தக் கால இடைவெளியை வைக்க வேண்டி யிருக்கிறது.

ஏன் இந்த விசுவாசம் அவ்வளவு முக்கியம்? ஏன் இந்த விசுவாசம் அவசியம்? அன்பு, தாழ்மை, பொறுமை, பரிசுத்தம், நீதி, ஆகியவைகளெல்லாம் வேண்டும், ஆனால், விசுவாசம் ஏன் மிக அவசியம்? இந்த விசுவாசம் இல்லாமல் நாம் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை வாழ முடியாதா? தேவனுடைய உண்மைகளை நம்முடைய வாழ்க்கையிலே மெய்யாக்குவதற்கு தேவையானது விசுவாசமே. பார்ப் பதற்கு கண் அவசியம், பெரிய படிப்பு அவசியம் இல்லை.

கடைசியாக எந்த அளவுக்கு இந்த விசுவாசம் என்கிற புலன் வலுப்பெற்றிருக்கிறதோ, அந்த அளவுக்கு மட்டுமே நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாகவும், பயனுள்ளவர்களாகவும் வாழ முடியும்.